**Most Rev. Dr. George Antonysamy**
Archbishop of Madras and Mylapore

க/பேசெ/01/1523 சென்னை, 18 மார்ச் 2020

பெறுநர்
பங்குத் தந்தையர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் இறைமக்கள்
சென்னை-மயிலை உயர் மறைமாவட்டம்

இறையேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே,

கடந்த மார்ச் 07ஆம் தேதி, 2020 அன்று கொடுத்த சுற்றறிக்கை எண் க/பேசெ/01/1518இன் தொடர்ச்சியாக, இந்த சுற்றறிக்கை வழங்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து நாம் பாதுகாப்பாக இருக்க, தமிழக அரசு பொதுமக்களுக்கு அளித்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றை தாமதமின்றி உடனடியாக செயல்படுத்த வேண்டிய கட்டாயக் கடமை நமக்கு இருக்கிறது. இந்த நாட்களில், தமிழகத்தில் அனைவரும் மக்கள் அதிகமாகக் கூடும் நிகழ்வுகளைத் தவிர்க்க அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். அதன்படி, திருவழிபாடுகள் தழுவிய கீழ்காணும் தற்காலிகமான ஏற்பாடுகளை நமது சென்னை-மயிலை உயர் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகள், நிறுவனங்கள், துறவியர் இல்லங்கள் ஆகியவற்றில் உடனடியாக நடைமுறைப்படுத்த கேட்டுக் கொள்கிறேன்.

1. இன்று முதல் வருகின்ற மார்ச் 31ஆம் தேதி, 2020 வரை நடைபெறும் ஞாயிறு கடன் திருநாள் திருப்பலிகள் மற்றும் தினசரி திருப்பலிகளில் பங்கெடுப்பதிலிருந்து இறைமக்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது.
2. தவக்காலத்திற்கென்று சிறப்பாக திட்டமிடப்பட்டிருந்த திருப்பயணங்கள், தியானங்கள், திருச்சிலுவைப்பாதைகள், பொது செப வழிபாடுகள், பொது ஆராதனைகள் ஆகியவை கைவிடப் படுகின்றன.
3. நம் குடும்பங்களில் உள்ள வயது முதிர்ந்தவர்களுக்கு கொரோனா நோயின் தொற்று வேகமாகப் பரவும் என்பதால், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் வீடுகளில் இருந்தவாறு ஆன்மிக செயல்களில் ஈடுபட்டு, உடல் நலனைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.
4. வீடுகளில் உள்ள நோயுற்றோருக்கும், நடக்க முடியாத முதியோருக்கும் பொதுவாக முதல் வெள்ளிக் கிழமைகளில் / அல்லது வேறெந்த நாளிலோ திவ்விய நற்கருணை வழங்கும் வழக்கம் இருப்பின், அந்தந்த பங்குத் தந்தையர்கள் இறைமக்களின் ஆன்ம நலன் கருதி, அவர்களுக்கு அருட்சாதனங்களை வழங்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
5. ஞாயிற்றுக் கிழமைகள் 'ஆண்டவருடைய நாள்' என்பதாலும், மேலும் இது தவக்காலமாக இருப்பதாலும், நாம் கீழ்காணும் சிறப்பு மன்றாட்டு மற்றும் ஒறுத்தல் முயற்சிகளை வீடுகளில் இருந்தவாறே மேற்கொள்ளுமாறு அழைக்கின்றேன்.
   - வீடுகளில் குடும்பமாக அமர்ந்து குடும்ப செபமாலை செபித்தல்; திருப்பாடல்கள் மூலம் செபித்தல்; இறைவார்த்தையை வாசித்து தியானித்தல்; சுருக்கமான சிலுவைப்பாதை மேற்கொள்ளல் ஆகியன பரிந்துரைக்கப் படுகின்றன.
   - ஏற்ற வசதிகள் இருப்பின், மாதா தொலைக்காட்சி, அற்புதர் இயேசு டிவி மற்றும் youtube அலைவரிசை வழியாக தரப்படுகின்ற San Thome TV இணையதள சேவையைப் பயன்படுத்தி, திருவழிபாடுகளில் ஆன்மிகப் பங்கேற்பு செய்து செபிப்பது வரவேற்கப் படுகிறது.
   - பொதுவாகவே, சென்னை மாநகரில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் வழிபாடுகளின்போது மக்கள் அதிகமாகக் கூடுவதால், இந்த நாட்களில் இறைமக்கள் பெரும் குழுக்களாக ஆலயங்களில் கூடுவதைத் தவிர்த்து, தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் தனிசெபம் செய்ய ஆலயத்தைப் பயன்படுத்திக்கொள்ள பரிந்துரைக்கப் படுகிறார்கள்.

அன்புக்குரியவர்களே, மிகவும் இக்கட்டான சவால் நமக்குமுன் இருப்பதை நாம் நன்றாகவே அறிந்திருக்கின்றோம். ஆலயத்திற்கு வராமல், திருப்பலியில் பங்கேற்று திவ்விய நற்கருணையைப் பெறாமல் இருப்பது கட்டாயம் கடினம்தான். ஆயினும், இன்றைய சூழலில், நம் அடுத்திருப்பவரின் நலனையும் காப்பாற்ற வேண்டிய மேலான பொறுப்பினை உணர்ந்து, மேலே குறிப்பிட்ட ஆன்மிக ஒறுத்தல்களை கொரோனா நோயிலிருந்து நாம் முழு விடுதலை பெறுவதற்காக ஒப்புக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த ஏழை கூவியழைத்தான்; ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்" (திபா. 34: 6) என்ற இறைவார்த்தையில் திடம் கொண்டு, காக்கும் இறைவன் நாம் எதிர் கொண்டுள்ள இப்போராட்டத்தில், நம்மையும், நம் உறவுகளையும், இந்த அழகான உலகத்தையும் பாதுகாப்பார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடும், துணிச்சலோடும் இந்த சவாலைக் கையிலெடுப்போம். இறைஇரக்கத்திற்காக தொடர்ந்து மன்றாடுவோம்.

இறைஅன்னையின் அரவணைப்பில்,

† George Antonysamy

† பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி
சென்னை-மயிலை உயர் மறைமாவட்டம்

ARCHDIOCESE OF MADRAS - MYLAPORE
St. Thomas the Apostle
CHENNAI - 600 004

குறிப்பு : புனித வார திருவழிபாடுகளைப் பற்றிய கூடுதல் பரிந்துரைகள் கொண்ட சுற்றறிக்கையானது வருகிற ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் அனுப்பப்படும்.

Archbishop's House, # 41, Son Thome High Road, Chennai 600 004
Ⓣ +91 - 44 - 2464 1102 / 2464 0833 Ⓕ + 91 - 44 - 2464 1999 Ⓔ Email: abpmmsec@gmail.com

Scanned with CamScanner